6 மே 2018

Newbec
NEW WAY OF BEING CHURCH
பாஸ்கா காலம் 6ம் ஞாயிறு
எதிர்நோக்கம் கொண்ட சீடர்களாகுவோம்

# கிறிஸ்துவில் இயங்கும் குடும்பம்...
# பிறரை நேசிக்கும்



குடும்பத்திலிருந்தே அன்பு விளையும். இயற்கையான பெற்றோரோ, தத்துப் பெற்றோரோ பாதுகாப்பாளரோ இருந்தாலும் அன்பு என்பது குடும்பத்திலிருந்தே முதலில் தோன்றும். எந்தவோர் குடும்பத்திலும் இயற்கையாகவே உறவுகள் பின்னி பிணைத்திருக்கும். நவீன கால சமூக அமைப்புமுறையைக் கொண்ட புதிய தலைமுறையை உறவுமுறைக்கு முக்கியத்துவம் கொடுப்பதுக் குறைவு. பழைய தலைமுறையினரை அவர்கள் ஒதுக்கி வைத்து விட்டனர் அல்லது நமது நவீன குடும்பங்கள் பழைய தலைமுறை பழக்கத்தைப் புறக்கணித்து விட்டது எனலாம். நாடு முழுவதும் காளானை போல் அங்காங்கே முளைத்திருக்கும் கடைத்தெருக்களுக்கு

---

தொலைவில் இருப்பவர்களை நேசிப்பது எளிது. அருகில் இருப்பவர்களை நேசிப்பது எளிதல்ல. நம் ஒவ்வொருவருக்குமான அன்பு நமது இல்லத்திலிருந்து தொடங்குவதால், எனவே உங்கள் இல்லத்தில் அன்பை விதையுங்கள்.

- புனித கல்கத்தா திரேசா

வாரந்தோறும் செல்லும் புதிய தலைமுறை. பெற்றோர், உடன்பிறந்தோர் அல்லது சொந்தங்களோடு எத்தனை முறை ஒன்றாக சேர்ந்துச் செல்வதைப் பார்த்திருக்கிறோம் என்பதைக் கேட்டுக் கொண்டால், இந்த எதார்த்தத்தின் உண்மை நிலை புரியும்.

இன்றைய நமது நவீன வாழ்க்கை முறை, குடும்ப கூட்டுமைப்பின் தேவைக்கு ஏற்புடையதாக இருக்கிறதா? அல்லது நமது குடும்பத்திற்குக் கொடுக்கும் முக்கியத்துவம் நமது வசதிக்காக அல்லது தேவைக்காக மட்டுமே நடக்கிறதா? வாரத்திற்கு ஒருமுறை கிறிஸ்துவே நமது வாழ்வின் மையம் என பிரகடனம் செய்து விட்டு, நமது சுய ஆசைகளால் நமது வாழ்வு அலைக்கழிக்கப்படுவதற்கு நாம் அனுமதிக்கிறோம். முப்பது ஆண்டுகளுக்கு நன்கு ஊன்றியிருந்த கிறிஸ்துவச் சமூக அமைப்பின் அடிப்படை தேவைகளைக் கைவிடும் அளவுக்கு நமது நவீனக்கால குடும்பங்கள், கிறிஸ்துவை விட்டு விலகி விட்டனவா? அதிச சமூகங்களின் ஈடுபாடுக் குறைவு என கடந்த சில ஆண்டுகளாக நாம் விவாதித்து வருவதற்கு காரணம் என்ன? நமது கண்முன்னே, படிப்படியாக சமூகம் சீர்குலைந்து வரும் உண்மை நிலையை நாம் உணருகிறோமா?

இயேசு கட்டளையிட்டது (யோவான்15:12) போல், ஒருவரையொருவர் அன்பு செய்வதை நோக்கி முன்னெடுக்க வேண்டும். கிறிஸ்து கட்டளையிட்டவாறு, நமக்கு அப்பால், நமது பார்வையைச் செலுத்த வேண்டும். நாம் என்பதை விடுத்து மற்றவர்கள் மீது நமது கவனத்தை செலுத்துவோம். அதனை நமது குடும்பத்திலிருந்து தொடங்குவோம். நமது உற்றார், அண்டை அயலாரிடமிருந்து தொடங்கி, முன்பொரு காலத்தில் இருந்த பாசப்பிணைப்பை ஏற்படுத்துவோம். நமது செப வாழ்விலும், குடும்ப மற்றும் சமூக அருட்சாதன வாழ்விலும் தேய்வு நிலை ஏற்பட்டிருக்கும் நிலையை ஏற்றுக் கொள்ள நாம் தயாராக வேண்டும். இல்லையென்றால், குடும்ப அமைப்புமுறை சிதறுவதையும், கருத்தடை கலாச்சாரம் ஊடுருவதையும், குடும்ப வன்செயல் அதிகரிப்பதையும், தனித்து வாழும் குடும்பங்கள் பெருகி வருவதையும் கண்கூடாக காணப் போகிறோம். இந்த உண்மைநிலையை உணர்ந்து, நமக்கென்ன என்ற போக்கு மாறி, விழித்தெழ வேண்டும்.

குடும்பமே திருச்சபையின் அடித்தளம். தூய ஆவியால் ஆட்கொள்ளப்படும் குடும்பங்கள், திருச்சபையாக உருவெடுக்கின்றன. அன்பாலும் பக்தியாலும் பிணைக்கப்படும் திருச்சபை சமூகங்கள், குணமளிப்பு வரத்தை பெறுகிறது என சமூக ஆய்வுகள் காட்டுகின்றன. நம்மை அன்பு செய்பவரை மட்டும் அல்லாது ஒவ்வொருவரையும் அன்பு செய்ய வேண்டும் என்பது நமது கிறிஸ்துவ விசுவாசம். அதுவே இயேசுவின் போதனை. கடவுள் நம்மை தேர்ந்து கொண்டார், பிறரை நாம் அன்பு செய்யும் போது அவரது அன்பின் ஆழத்தையும் ஆற்றலையும் நமக்கு வெளிப்படுத்துகிறார். இவ்வாறு நாம் செய்யாத வரை, இன்னல் இடர்களை சந்திக்கும் தனிநபராகவே இருப்போம். ✝

**வாரம் ஒரு வசனம்**

ஒவ்வொருவரையும் அன்பு செய்ய வேண்டும் என்பது நமது கிறிஸ்துவ விசுவாசம்.

INTERNAL CIRCULATION ONLY
BUL 18/2018
Published by: Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org
Print: Steno Print Sdn Bhd
Design: The Mustard Seed Studio

**மினவுதல் மாதா தேவாலயம்**
85A, ஜலான் யாம் துவான், 70000 சிரம்பான்
தொ.பே : 06-762 4468 / 763 4934 / 767 7542
தொ.நகல் : 06-767 7544
Email: : serembanvisitation@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. ஜோர்ஜ் ஹரிசன்
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. அன்ட்ரு கூய்

*2018 ஆம் ஆண்டின் கருப்பொருள்:*
**எதிர்நோக்கு கொண்ட சீடர்களாகுவோம்**
*2018 ஏப்பிரல் (சித்திரை) மாதத்தின் கருப்பொருள்:*
**கிறிஸ்துவில் மீட்கப்பட்டோம்**
**மினவுதல் தேவாலயத்தின் 170ஆம் ஆண்டை நோக்கிய பயணம்**
**( 1848 – 2018 )**

**<u>பங்கு அலுவலக நேரம்:</u>**
**திங்கள் - வெள்ளி:** காலை 8.30 - மாலை 5.30
**சனி :** காலை 8.30 - மாலை 7.30
**ஞாயிறு :** காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடை பெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**<u>இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்:</u> பாஸ்கா 6ஆம் ஞாயிறு சனி 05-05-2018 ஞாயிறு 13-05-2018**
**தி.ப 10: 25-26, 34-35, 44-48 தி.பா 97: 1, 2-3ab, 3cd-4 1 யோவான் 4: 7-10 யோவான் 15: 9-17**
**பிற இனத்தார் முன் ஆண்டவர் தம் நீதியை வெளிப்படுத்தினார் ! (தி. பா 97)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 05 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (புனித 1ஆம் புரூணோ) | |
| ஞாயிறு | 06 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br>01.00ம | திருப்பலி (த) (புனித மரியா)<br>திருப்பலி (ஆ) (புனித 2ஆம் புரூணோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |
| திங்கள் | 07 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (ஆ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| செவ் | 08 | 6.45 கா | திருப்பலி | *தூய ஆவி அருங்கொடை செபம் (சீ) மாலை 7.30 மினவுதல் தேவாலய மண்டபம்* |
| புதன் | 09 | 6.45 கா | திருப்பலி | ***14வது பொதுத் தேர்தல்*** |
| வியா | 10 | *ஆண்டவரின் விண்ணேற்பு (கடன்திரு நாள்) காலை 6.45 திருப்பலி (ஆ), மாலை 7.30 திருப்பலி (ஆ / த / சீ / தே.மொ)* | | |
| வெள் | 11 | 6.45 கா | திருப்பலி | |

**பாஸ்கா 7ஆம் ஞாயிறு**
**தி.ப 11: 15-17, 20-26 தி.பா 102: 1-2, 11-12, 19-20 1 யோவான் 4: 11-16 யோவான் 17: 11-19**
**ஆண்டவர் தமது அரியணையை விண்ணகத்தில் நிலைநிறுத்தியுள்ளார் ! (தி. பா 102)**

| | | | | |
|---|---|---|---|---|
| சனி | 12 | *5.00 மா*<br>*5.30 மா*<br>*5.45 மா*<br>*6.00 மா* | செபமாலை<br>இடைவிடா சகாய அன்னை<br>நற்கருணை ஆசீர்வாதம்<br>திருப்பலி (ஆ) (இளைஞர் குழு) | |
| ஞாயிறு | 13 | 7.00 கா<br>9.00 கா<br>11.00 கா<br><br>01.00ம | திருப்பலி (த) (திரு வழிபாட்டுக் குழு)<br>திருப்பலி (ஆ) (புனித 3ஆம் புரூணோ)<br>திருப்பலி (சீனமொழி)<br>மாலை 4.30 தித்தி (சீ)<br>திருப்பலி (தே.மொ) | **மறைக்கல்வி (த)** காலை 8.45 -10.15 (சீ) கா 9.00-10.30<br>(ஆ) கா 10.45 -12.15 (தே.மொ) 10.45 -12.15<br>**முதியோர் கிறிஸ்துவ புகுமுக வகுப்பு** ( முகிபுவ )<br>காலை 9.00 - 10.30 ( தமிழ் ) காலை 11.00 - 12.30 ( தே. மொ )<br>காலை 11.00 - 12.30 ( ஆங்கிலம் ) காலை 9.00 - 10.30 (சீனம் ) |

நம்முடைய மினவுதல் தேவாலயத்திற்கு வருகை தந்திருக்கும் **புதிய பங்கு மக்கள், கல்லூரி மாணவர்கள், சிரம்பான் வட்டாரத்தில் புதிதாக குடியேறியிருக்கும் சகோதர சகோதரிகள் அனைவரையும் வரவேற்கிறோம்.** உங்களுக்கு அன்னை மரியாளின் பாடல் அடங்கிய செப அட்டை வழங்கப்படும். உங்களின் பெயர்களைப் பங்கு அலுவலகத்தில் பதிந்து கொள்ளவும் அல்லது serembanvisitation@gmail.com மின்னஞ்சல் வழியாக தொடர்பு கொள்ளவும்.

இன்று திருப்பலியை சிறப்பாக வழி நடத்த உதவியவர்களுக்கும் மற்றும் திருவழிபாட்டு குழுவினருக்கு நம்முடைய மனமார்ந்த நன்றிகள்

**<u>2018 மே (வைகாசி) மாத செய்திகள் / நிகழ்வுகள்</u>**

**i) பங்கு ஆலய காணிக்கை;**
28/29 ஏப்பிரல் ரிம: 9,305.15
இறைவன் அணைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

ii) **5, 6 மே 2018** சமூக அக்கறைப் பணிக்குழுவினருக்காக **2வது** காணிக்கை எடுக்கப்படும்
இறைவன் அணைத்து தாராள உள்ளங்களையும் நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!

**iii) ஆலயத்திலுனுள் அமைதியைக் கடைப்பிடிப்போம்:** திருப்பலிகளுக்கு இடையில் வாசகங்கள் வாசிக்கும் ஒத்திகை அனுமதிக்கப்படாது. திருப்பலிகளுக்கு மரியாதையான உடையணிந்து வருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**<u>மரித்த ஆன்மாக்களுக்காக செபிப்போம்</u>**
பெட் ரீசியா கந்தையா (இறப்பு: 02/05/2018)
**<u>முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக!</u>**

- **<u>இளைஞர்களுக்கு ஒரு உத்வேகப் பயிற்சி</u>** - மினவுதல் மாதா தேவாலய இளைஞர்களுக்கு தங்களை ஊக்கப்படுத்திக்கொள்ள ஒரு அரிய வாய்ப்பு: நாள்: 06-05-2018 மாலை 4.00 - 7.00 (அருள்தந்தையர்கள் பேட்ரிக் & யூஜின் லீ)
- **<u>மரியாயின் சேனை உறுப்பினர்களுக்கு</u>** (தமிழ் & ஆங்கிலம்) ஒரு அரிய வாய்ப்பு: **மரியாள் - சீடத்துவத்திற்கு நிறைவான முன்மாதிரி** மே 08(செவ்வாய்) மாலை 4.00 மணி. - மே 06 (ஞாயிறு) சீனமொழி.
- **<u>நோயாளிகள் சந்திப்பு:</u>** மே மாதத்தின் 8, 10, 11 ஆம் திகதிகளில் வீடுகளில் இருக்கும் நோயாளிகளை இரட்சகர் சபைக் குருக்கள் சந்திக்கவிருக்கிறார்கள். விரைவில் ஆலய அலுவலகம் குடும்பங்களுக்கு தெரியப்படுத்தும்
- **<u>மோன்போர்ட் போய்ஸ் மையம்:</u>** 2018 ஆம் ஆண்டின் கார்னிவெல் நிதி திரட்டும் விழாவுக்காக டிக்கெட்டுகளை விற்பனை செய்ய இங்கு வந்திருக்கிறார்கள். டிக்கெட்டுகளை வாங்கி அவர்களுக்கு நம்முடைய ஆதரவை வழங்குவோம்.

**<u>பங்கு தூதுப்பணி</u>**

- **<u>அதிச இல்லங்களில் திருப்பலி அட்டவணை:</u>**

| | | |
|---|---|---|
| அ) | 07 மே (திங்கள்) | தாமான் சத்ரியா(செனவாங்); புனித மோனிக்கா(செனவாங்)<br>புனித ஜேம்ஸ்(செனவாங்) புனித கேத்ரின்( சிரம்பான் 2) |
| ஆ) | 08 மே (செவ்வாய்) | பு.லோரென்சொன்(மம்பாவ், சிரம்பான் 3) பு. ஜூட்(துவாங்கு ஜபார்)<br>புனித பியோ(துவாங்கு ஜபார்) புனித ஜோன் போஸ்கோ(சிரம்பான் ஜெயா) |
| இ) | 09 மே (புதன்) | புனித திரேசா(சிரம்பான் ஜெயா) புனித இரேனியுஸ்(சிரம்பான் ஜெயா)<br>புனித ரபேல்(மம்பாவ், சிரம்பான் 3) புனித ஜோக்கிம் (சிரம்பான் ஜெயா) |
| ஈ) | 10 மே (வியாழன்) | புனித ஆர்தர்(சிரம்பான் 2) புனித ஜோன் போல் 2 (சிரம்பான் 2)<br>புனித மத்தியாஸ்(துவாங்கு ஜபார்) புனித புரூனோ 1(சிரம்பான் 2) |
| உ) | 11 மே(வெள்ளி) | புனித புரூனோ 2 (சிரம்பான் 2) புனித புரூனோ 3(சிரம்பான் 2)<br>புனித பெர்னடின் 1(சிரம்பான் 2) புனித பெர்னடின் 2 (சிரம்பான் 2) |

**கூடுதல் விவரங்களுக்கு உங்களுடைய அதிச /சோன் பொறுப்பாளர்களை தொடர்பு கொள்ளவும்.**

- **<u>170 ஆம் ஆண்டு நி றைவுக்காக - "காபி மேசை " நினைவுப்புத்தகம் மற்றும் வரலாற்று ஒளிவட்டு</u>** ஆகிய தயாரிப்பில் ஈடுபடும் குழுவினர்அனைவரையும் நம் செபங்களில் ஒப்புக்கொடுப்போம் இந்தப் புத்தகத்திற்காக முன்பதிவு செய்து கொள்ளலாம். தொடர்புக்கு: ஜெரோம் 019-790 8071
- **14 ஆவது பொதுத் தேர்தல் : 09 மே 2018** - விவேகத்தோடு வாக்களியுங்கள்- உங்களுடைய மனசாட்சியின் குரலுக்கு செவிகொடுங்கள். தேர்தலின் போது கீழ்க்கண்டவற்றை மனதில் இருத்துங்கள்.
  - வேட்பாளரைத் தேர்ந்தெடுத்து வாக்களியுங்கள்
  - அனைத்து மக்களையும் அமைதி சுபிட்சம் மற்றும் ஒற்றுமையில் கொண்டுவரும் வேட்பாளரைத் தேர்ந்தெடுங்கள்
  - சுதந்திரத்தோடும் , நேர்மையோடும் தேர்தல் நடைபெற செபயுங்கள்.
- **மே 23 - 31 வரை** - பங்கின் 170 ஆம் ஆண்டு நிறைவுக் கொண்டாட்டம் மற்றும் திருவிழா ( விவரங்கள் விரைவில் )
- **12-05-2018** (சனிக்கிழமை) காலை 10 முதல் மாலை 4 வரை - குடும்ப வாழ்வுப் பணி உரை (ஆங்கிலம்/சீனம்/தேமொ)
- **06-05-2018** (ஞாயிறு) பகல் 2.00 - குடும்ப வாழ்வு - தமிழ் **"அவர்கள் அனைவரும் ஒன்றாய் இருப்பார்களாக"** (யோவான்:17:21)
- **13-05-2018** (ஞாயிறு) மாலை 5.00 மணி வின்செண்ட் டி போல் குழுவினருக்கு - ஆலய உணவு விடுதி
- **19-0-5-2018** (சனி) காலை 9.00 - 1.00 வரை **"இதை என் நினைவாகச் செய்யுங்கள்"** (லூக்கா 22:19) - அனைத்து நற்கருணைப் பணியாளர்களுக்குமான உரை (ஆங்கிலம்/தமிழ்/சீனம்/தேமொ)
- **பெந்தகோஸ்தே திருவிழிப்பு** - சனிக்கிழமை 19-05-2018 இரவு 8.00 - நள்ளிரவு 12.00 வரை (ஆங்கிலம்/தமிழ்/சீனம்)

- **06/05/2018** (ஞாயிறு) பகல் 2.30 மணி - பங்கு திருவிழா தயாரிப்புக்காக திருவழிபாட்டுக் குழுவினரின் கூட்டம் - பங்கு அலுவலகம்.
- **15 & 16** (செவ்/புதன்) குருக்களின் மாதாந்திரக் கூட்டம் APC,KL
- **20 மே** (ஞாயிறு) புதுக் கிறிஸ்துவர்களின் தூதுப்பணிக்கு அனுப்பும் சடங்கு(கிபுமுவே) - பெந்தகோஸ்தே ஞாயிறு